சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – திருநெல்வேலி கோட்டம் – திரு தெ.திருமலைக்குமார் என்பவர் கருணையடிப்படையில் 07.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை**

**அரசாணை (டி) எண்.180**

**நாள்: 20.11.2021**
**பிலவ, கார்த்திகை–4,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2052**

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. இணை ஆணையர் (வ.வ), திருநெல்வேலி கோட்டம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ8/3822/ 2020, நாள் 30.07.2020.
4. இணை ஆணையரின் (நிர்வாகம்), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) கடித எண். ஓய்–3/ 1004461/2021, நாள் 09.07.2021.

*****

ஆணை:

வணிகவரித் துறையின் திருநெல்வேலி கோட்டம், உதவி ஆணையர் (மா.வ), திருநெல்வேலி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தபோது திருமதி க.விநாயகம் என்பவர் 03.01.2020 அன்று மரணமடைந்ததால் அவரது கணவர் திரு தி.தெட்சிணாமூர்த்தி என்பவர் தனது மகன் திரு தெ.திருமலைக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 11.03.2020 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு தெ.திருமலைக்குமார், இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். நடைமுறையிலுள்ள அரசாணைகளின்படி, தனியர் கருணை அடிப்படையில் பணி

நியமனம் பெறத் தகுதியுடையவராக அறியப்பட்டு, மேற்படி கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட திருநெல்வேலி கோட்டம், இணை ஆணையரின் (வ.வ) செயல்முறைகளின்படி வணிகவரித் துறையின் திருநெல்வேலி கோட்டம், மேல்முறையீட்டு துணை ஆணையர் (வ.வ), திருநெல்வேலி அலுவலகத்திற்கு தனியர் ஒதுக்கீடு செய்யப்பட்டு 07.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார். கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு தெ.திருமலைக்குமார் பணியேற்பு செய்த நாளான 07.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்ய மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் இணை ஆணையர் (நிர்வாகம்), (வணிகவரி ஆணையர் அலுவலகம்) அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்காணும் இணை ஆணையரின் கருத்துருவைப் பரிசீலித்ததில், திரு தெ.திருமலைக்குமார், கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்வதற்குத் தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான, இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், தனியரின் பணிவரன்முறை தொடர்பான அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டதில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை நிர்ணயம் செய்துள்ள கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார்.

3. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. எனவே வணிகவரித் துறையில், திருநெல்வேலி கோட்டம், உதவி ஆணையர் (வ.வ) அலுவலகம், திருநெல்வேலி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்தபோது 03.01.2020 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி க.விநாயகம் என்பவரது மகன் திரு தெ.திருமலைக்குமார் என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், வணிகவரித் துறையில், திருநெல்வேலி கோட்டம், மேல்முறையீட்டு துணை ஆணையர் (வ.வ), திருநெல்வேலி அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 07.08.2020 முற்பகல் முதல் அப்பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி

வரன்முறைப் படுத்தப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

5. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.17208/ட்டி-1/2021, நாள் 05.10.2021 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.34778/ஜி1/2021-1, நாள் 17.11.2021 ஆகியவற்றில் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்</u>:

திரு தெ.திருமலைக்குமார், இளநிலை உதவியாளர்,
மேல்முறையீட்டு துணை ஆணையர் (வ.வ) அலுவலகம், திருநெல்வேலி, திருநெல்வேலி கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பந்தப்பட்ட சம்பள கணக்கு அலுவலர்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக)

<u>நகல்:</u>

இணை ஆணையர் (மா.வ), திருநெல்வேலி கோட்டம்.
(முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5 வழியாக).
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (ட்டி-1) துறை,
சென்னை - 9.
மாண்புமிகு அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவுத்துறை) அவர்களின் சிறப்பு
நேர்முக உதவியாளர், சென்னை -9.
அரசுச் செயலாளரின் தனிச் செயலர்,
வணிகவரி மற்றும் பதிவுத் துறை, சென்னை-9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

for. 22/11/2021

(மா. இராமகிருஷ்ணன்)
அரசுச் சார்புச் செயலாளர்

22/11/2021